**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF AT ALANDUR</u>**

**<u>OS.No.168/2024</u>**

Deposition of Witness for plaintiff/Defendant solemnly affirmed by Tmt.Mullai, Junior Assistant in accordance with the provisions of Act X of 1873 On 11.08.2026

| | |
|---|---|
| சாட்சி எண் : பி.வா.சா .1 | வயது : 36 |
| பெயர் : வரபிரசாத் | தாலுக்கா : ஆலந்தூர் |
| தந்தை பெயர் : சூரியநாராயணன் | |

**பி.வா.சா. 1 சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது, அடையாள அட்டை ( ஆதார் அட்டை) சரிபார்க்கப்பட்டது.**

**<u>பி.வா.சா. 1 கூடுதல் முதல் விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கின் 5 ஆம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு முதல் சாட்சியாவேன். எனது தரப்பு கூடுதல் முதல் விசாரணையை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

**பி.வா.சா.ஆ 5 குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>கூடுதல் முதல் விசாரணையின் அடிப்படையில் பி.வா.சா.1 –ன் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்னுடைய முதல் குறுக்கு விசாரணையில் இந்த வழக்கு தாக்கல் செய்தவுடன் வாதிகள் என்னை வந்து சந்தித்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தேன், அவர்கள் என்னை எங்கு வந்து சந்தித்தார்கள் என்றால், எனது வீட்டில் வந்து சந்தித்தார்கள். அப்போது வாதிகள் என்னிடம் என்ன கூறினார்கள் என்றால், அவர்களும் சூரியநாராணயணனின் வாரிசுகள் என்று கூறினார்கள். நான் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வாதிகள் சூரியநாராணயணன் வாரிசுகள் என்று வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்திடம் இருந்து

விளம்புகை பரிகாரம் பெற்றுகொள்ளவேண்டும் என்று அறிவிப்பை பெற்றிருந்தேன் , அதன்படி அவர்களை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யுமாறு கூறினேன்.

2. இந்த வழக்கின் வாதிகள் தாக்கல் செய்திருந்த ஆவணங்களின் நகல்கள் என்னிடம் உள்ளது, அதை நான் படித்து பார்த்துள்ளேன் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 11 வாதிகளின் தாயாரின் மறைவிற்கு பின் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் ஆகும். அதில் வாதிகளின் தாயாரின் கணவர் பெயராக சூரியநாராணயணன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

3. நான் சூரியநாராணயணனின் மனைவி ராஜசுலோச்சனா இல்லை என்று மறுக்கும் நிலையில் அவரின் மறைவிற்கு பின் வழங்கப்பட்ட வாரிசுசான்றிதழில் சூரியநாராணயணனின் பெயர் கணவர் என்று குறிப்பிட்டிருப்பதற்கு ஆட்சேபனை ஏதும் தெரிவித்து மனு அளித்தேனா என்றால், அவ்வாறு ஆட்சேபனை எதுவும் அளிக்கவில்லை. வாதிகள் தாக்கல் செய்திருந்த திருமண பத்திரிக்கையில் R. சூரியநாராணயணன் என்று உள்ளது. வா.சா.ஆ 11 ல் N. சூரியநாராணயணன் என்று உள்ளது எது சரியானது என்று தெரியவில்லை. திருமண அழைப்பிதழ் பொதுவாக வெளியில் அச்சிடப்படும், வா.சா.ஆ 11 அரசாங்கத்தால் வழங்கப்படும் ஆவணம் ஆகும், அதில் எனது தந்தை சூரியநாராணயணனின் முதல் எழுத்து N என்று சரியாக வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

4. நான் பி.வா.சா.ஆ 5 –யை இந்த நீதிமன்றத்தில் குறியீடு செய்வதற்கான அவசியம் என்னவென்றால், வாதிகள் தாக்கல் செய்திருந்த பள்ளி ஆவணங்களில் வேறு பிரிவு குறிப்பிடப்பட்டிருந்தது, நாங்கள் வேறு பிரிவை சார்ந்தவர்கள் என்று காண்பிப்பதற்காக பி.வா.சா.ஆ 5 –யை தாக்கல் செய்திருந்தேன். பி.வா.சா.ஆ 5 ல் எனது

தாயார் ருக்மணியின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். எனது கல்வி தகுதி என்னவென்றால், பொறியியல் படித்துள்ளேன். எனது தந்தையின் கல்வி தகுதி என்னவென்றால், 8 ஆம் வகுப்பு படித்திருந்தார். எனது தந்தை கூறியதன் அடிப்படையில்தான் எனக்கு தெரியும். எனது தந்தையின் சாதி சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால், தேடி பார்த்தால்தான் முடியும்.

5. நான் என்னுடைய பள்ளி சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்யவில்லை. நான் என்னுடைய தந்தைக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழையோ, அல்லது என்னுடைய பள்ளி சான்றிதழையோ இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தற்போது குறியீடு செய்யப்பட்ட பி.வா.சா.ஆ 5 பொய்யாக இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று தெரியவரும் என்ற காரணத்தினால் மேற்கூறிய இரண்டு ஆவணங்களையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ 5 ஏற்றுகொள்ளதக்கதல்ல என்றால், சரியல்ல.

6. சாதி சான்றிதழின் அடிப்படையில் ஒருவருக்கு எத்தனை மனைவிகள், குழந்தைகள் என்பதை நிரூபிக்க இயலாது என்றால், சரியல்ல. சூரியநாராணயணன் வாதிகளின் தாயாரை தான் பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என்று கூறி திருமணம் முடித்தார், பிறகு என்னுடைய தாயாரை மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்று இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்றால், எனது தந்தைக்கு முதல் திருமணம் நடைபெற்றதை நான் மறுக்கிறேன். எனது தந்தை சூரியநாராணயணன் எத்தனை திருமணம் செய்தார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது.

7. வாதிகள் இருவரும், மற்றும் நானும், என் சகோதரி ராதிகா ஆகிய நால்வரும் சூரியநாராணயணனின் வாரிசுகள் ஆவோம், எனவே வாதிகள் கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல. வாதிகள் இருவரும் என்னுடன் சேர்ந்துதான் சிறுவயதில் இருந்து வளர்ந்தார்கள், என் தாயார்தான் சூரியநாராணயணனுடன் சேர்ந்து வாதிகளுக்கு திருமணம் முடித்து வைத்தார், ஆனால் நான் தற்போது இந்த வழக்கிற்காக வாதிகள் சூரியநாராணயணனின் வாரிசுகள் என்பதை மறுக்கிறேன் என்றால், சரியல்ல.

Taken down by me in the Open Court read over interpreted to the deponent and admitted by him/her to be correct.

AISHVARYA K

Digitally signed by AISHVARYA K
Date: 2026.08.11 14:47:59 +0530

Additional District Munsif
Alandur